

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் துறவிக்கான உண்மையான இலக்கணங்களில் உறைவிடம்; எளிமையே அவரது நெறி; ‘குழந்தையைப்போல உள்ளம் கொள்பவர்களே மேன்மையான ஞானத்தின் இருப்பிடமாக முடியும்’ என்பதற்கு அவர் எடுத்துக்காட்டு.


அடிகளார் கருத்தாளர் மட்டுமல்ல; செயல்வீரரும் கூட! நாகை மாவட்டத்தை, சுனாமி சுழற்றி அடித்தபோது, காவி உடையோடு சடலங்களைத் தூக்கி அப்புறப்படுத்துவதில் முதல் வரிசையில் நின்ற போராளி. அவர், பெரியபுராணம் குறிப்பிடும் தொண்டு என்பதையே தோள்களில் ஏற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் சமகால ஞானி. அதனால், அவர் நூல் முழுவதும் மனிதநேயப் பண்புகளையே தூக்கிப் பிடிக்கிறார்!



– முனைவர். வெ. இறையன்பு

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
உயிர் நாரில் தொடுத்த மாலை!

# உயிர் நாரில் தொடுத்த மாலை!



தவத்திரு குன்றக்குடி
**பொன்னம்பல அடிகளார்**

அருள்நெறிப்பதிப்பகம்

திருமுறைகளை நமது மறையாகவும், திருக்குறளைப் பொதுமறையாகவும் ஏற்றுப் போற்றும் அடிகள்பெருமானின் ஆன்மிக, அறிவியல், கலை, இலக்கிய, வரலாற்றுச் சிந்தனைகளின் பிழிவாகவும் பொழிவாகவும் அமைந்த இனிய கட்டுரைகள் இந்நூலுள் இடம் பெற்றிருக்கின்றன.

சங்கஇலக்கியம் தொட்டு, சமய இலக்கியம் துலக்கிச் சமகால இலக்கியங்கள் காட்டித் தற்கால வாழ்விற்குத் தகுநெறிகள் புகட்டும் இக்கட்டுரைகள், வாழ்வியல், வழிபாடு, வரலாறு என்னும் மூன்று தளங்களில் அமைந்திருக்கின்றன.

எளிய மக்களும் மனங்கொள்ளுமாறு, கவிதை நடையில் சின்னஞ்சிறு தொடர்களில், நுட்பமிகு செய்திகளை, அழகுற அடுக்கி **உயிர்நாரில் தொடுத்த மாலை**யாகத் தம் குருநாதர் திருவடிகளில் சமர்ப்பணம் செய்திருக்கும் இந்நூல், அடிகள்பெருமானின் பொன்விழா ஆண்டில் முன்வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அருள்நெறிப்பதிப்பகத்தின் வாயிலாக இந்நூல் வெளிவர அருள்பாலித்த அடிகள்பெருமானின் திருவடிகளை வணங்கி மகிழ்கிறோம்.

எழுத்திலும் பேச்சிலும் செயலிலும் தனித்தன்மை கொண்டிலங்கும் முனைவர் திரு. **வெ.இறையன்பு** இ.ஆ.ப. அவர்கள், சிறப்புற வழங்கிய அணிந்துரை இம்மாலைக்கு இன்னும் பொலிவினை நல்கியிருக்கிறது. அன்னார் அவர்களுக்கும் மிக்க நன்றி.

இக்கட்டுரைகள் தோன்றக் காரணமாகிய ஊடகத்துறை நண்பர்களுக்கும், நூலாக்கத்திற்கு உதவிய அன்பர்களுக்கும் நன்றி சொல்லி மகிழ்கிறோம்.

பொன்விழா ஆண்டில் திருவடி வைத்தருளும் நம் மகாசந்நிதானம் அவர்களின் நன்மொழிகள் தாங்கிய இந்நூல், எல்லாரது இல்லங்களிலும் இருந்து அருள்பாலிக்க வேண்டும் என்று பணிந்து முன் வைக்கின்றோம்!

- பதிப்பகத்தார்.

# அணிந்துரை



முனைவர் **வெ. இறையன்பு** இ.ஆ.ப

துறவு என்பது அனைத்தையும் உதிர்ப்பது. யாரிடமும் பாசம் காட்டாமல் இருப்பது துறவு அல்ல. மாறாக, அனைத்தையும் நேசித்து அன்பு காட்டுவதே துறவறத்தின் இலக்கணம். எல்லாவற்றையும் துறந்தும், 'துறந்துவிட்டோம்' என்கிற அகங்காரத்தைத் தூக்கிக்கொண்டு அலைபவர்களைப் பார்க்கிறோம். காவி உடை கட்டிக்கொண்டு, சாதிகளை அரவணைப்பவர்களையும், சொந்தங்களைக் கட்டித் தழுவுபவர்களையும் பார்க்கும்போது சக்தி வாய்ந்த அதிகாரமாகத் துறவு மரிப்போவதை எண்ணி வருந்துகிறோம்.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் துறவிக்கான உண்மையான இலக்கணங்களில் உறைவிடம். எளிமையே அவரது நெறி. 'குழந்தையைப்போல உள்ளம் கொள்பவர்களே மேன்மையான ஞானத்தின் இருப்பிடமாக முடியும்' என்பதற்கு அவர் எடுத்துக்காட்டு. அவர் அருகில் இருந்தால் நம்மேல் அங்கங்கே ஒட்டிக்கொண்டிருக்கும் ஆணவமும் உதிர்ந்துவிழுந்துவிடும். அத்தகைய பெருமை அவரது தகைமை.

அடிகளார் அவர்கள், 'உயிர் நாரில் தொடுத்த மாலை' என்கிற உன்னதமான நூலை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நினைப்பதைக் காட்டிலும் குறைவாகப் பேசுபவர். தெரிந்ததை விடக் குறைவாக வெளிப்படுத்துபவர், முடிந்ததைக் கடுகளவு மட்டுமே காண்பிப்பவர் அடிகளார். அவர் அரிதாக எழுதுவார். அரிதாகவே பேசுவார். செயல்களிலும் சீர்திருத்தங்களிலும் அதிக நம்பிக்கை கொண்டிருப்பதால் இயக்கத்தில் அவர் உயிரும் இணைந்திருக்கிறது.

வள்ளுவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, மனிதகுலம் எந்தத் தடத்தில் பயணிக்கவேண்டும் என்பதை அழகாக எடுத்துச் சொல்லுகிறார். முன்னோர்கள் காட்டிய மழைநீர் சேகரிப்பு உத்திகளைப் பட்டியலிட்டுப் பரவசமடைகிறார் அடிகளார். அன்று இயந்திரங்கள் இல்லாதபோது மனிதன் உடலுழைப்பைச் சிந்தினான். கடல்போன்ற நீர்நிலைகளை உருவாக்கினான். இன்று அவற்றை ஆக்கிரமித்து நீரை வீணாக்கும் நிலைமையே நீடிக்கிறது. அடிகளாரைப் பொருத்தவரை எல்லாரும் எளிதாகப் புரிந்துகொள்ளத் தேவைப்படுகிற இடங்களில் வள்ளலாரையும், புத்தரையும், காந்தியடிகளையும் துணைக்கு அழைத்து, தன் கருத்தை ஆழமாகப் பதியவைப்பது சிறப்பு மிகுந்த வாசிப்பைத் தருகிறது. அடிகளார் கூறுவதைப்போல, சிலரது மரணம் உடலைத் துறப்பதோடு முடிவதல்ல. அவர்களுக்குப் பின்பும் அவர்கள் பணிகள் ஏதேனும் ஒருவகையில் துளிர்த்துக்கொண்டே இருக்கின்றன.

அறிவியல் பார்வை கொண்டவர் அடிகளார். இன்று சுற்றுச்சூழல் பாதுகாப்பது குறித்து அவரது உள்ளம் கசிந்து உருகுகிறது. கணவன் மனைவி இருவரும் இல்லறத்தில் சிறந்து விளங்க, கலித்தொகைப் பாடல் ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். குறுந்தொகையில், குரங்குகள் கூட, இணையை இழந்தால் உயிரைத் தியாகம் செய்வதைச் சுட்டிக்காட்டி, 'இல்லறம் என்பது நல்லறம், அதை முழுமையாக அணுகும்போதே அதன் பெருமை ஒளிரும்' என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். கார்ல்மார்க்ஸின் மனைவி ஜென்னியைப் பற்றியும், அடிகளார் குறிப்பிடுகிறார். அடிகளாரின் பரந்துபட்ட அறிவு உலகம் தழுவிய பார்வையாக வெளிப்படுகிறது.

இந்திய வேளாண்மை இயற்கையைச் சார்ந்தே இருந்தது. ஒரு பண்ணைக்குள் சென்றால் மாடுகளின் மணமும், சாணத்தின் நறுமணமும், அடுக்கி வைக்கப்பட்ட நெல்லின் வாசனையும் நம்மை ஆட்கொள்ளும். இன்று கால்நடைகளைக் கை கழுவிய வேளாண்மை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உரங்களின் பாதிப்பில் எருக்களைப் பின் தள்ளி வாழ்ந்து வருகிறோம். இன்று மறுபடியும் இயற்கை வேளாண்மை துளிர்க்க ஆரம்பித்திருக்கிறது. நம் முன்னோர்கள் எதையும் பொருளோடு செய்தார்கள்; ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்; இயற்கையை நேசித்தார்கள். நாமோ குறுகிய வழிகளைக் கடைப்பிடித்து அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம் என்கிற அடிகளாரின் பார்வை சிந்திக்கத் தகுந்தது.





அடிகளார் முயற்சியைப் பற்றி அழுத்தமாகப் பதிவு செய்கிறார். ஜப்பானை மேற்கோள் காட்டி முயற்சியால் நாம் இழந்தவற்றையும் திரும்பப் பெறலாம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். வாழ்க்கையை ஆக்கபூர்வமாகப் பார்க்கவேண்டும். அப்போதுதான் நல்ல அதிர்வலைகள் நம்மைச் சுற்றிப் பரவும் என்பதை, 'நல்ல வண்ணம் வாழலாம்' என்கிற கட்டுரையில் குறிப்பிடுகிறார். 'ஏதோ பிழைக்கிறேன்' என்று எதிர்மறையாகப் பேசுபவர்களை அடிகளார் சாடுகிறார். அடிகளாரின் அகண்ட அறிவில் ஜென் தத்துவமும் இடம்பெற்றிருக்கிறது.

'வாழ்வது வேறு; பிழைப்பது வேறு' என்று நம் இருத்தலைப் பொருளுள்ளதாக மாற்றுவதற்குச் சிந்திக்கத் தூண்டுகிறார். "பண் சுமந்த பாடல்களுக்காக இறைவன் மண் சுமக்கின்றான். அவன் பொன்மேனி புண் சுமக்கிறது" என்ற அழகிய வரிகள் இந்த நூலை, அழகு செய்கின்றன. "நான் மறைய வேண்டும்; நாம் மலர வேண்டும்" என்கிற தலைப்பே கவித்துவமாக இருக்கிறது. அப்பூதி அடிகளை உதாரணம் காட்டி அடிகளார் அகங்காரத்தையும், மமகாரத்தையும் உதிர்ப்பதற்கு உபாயம் சொல்கிறார். போரற்ற உலகம் குறித்துக் குறிப்பிடும்போது, 'இரண்டாம் உலகப்போரில் அழிந்த செல்வத்தைக் கணக்கிட்டால், உலகில் உள்ள அனைவருக்கும் ஐந்து அறைகள் கொண்ட வீட்டையும், ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு மருத்துவமனையையும் கட்டித் தரலாம்" என்று அடிகளார் குறிப்பிடுவது வன்முறையாளர்களின் இதயத்தைக் குறிவைத்த அம்புகள்.

இராஜராஜ சோழனைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவன் கோயிலை எழுப்பிய தலைமைத் தச்சனுக்கும், நாவிதருக்கும் தன் பெயரிலான பட்டத்தை அளித்து, கல்வெட்டிலும் பதித்துக் கௌரவப்படுத்தியதை எழுதி நம் மானுடத்தை உயர்த்த முயற்சி செய்கிறார். அடிகளாரின் வீரம் அவர் எழுதிய மருது சகோதரர்கள்

பற்றிய குறிப்பில் வெளிப்படுகிறது. அடுத்தவர் நலனை அனுசரிப்பதே வழிபாடு என்பது எந்தத் துறவியும் எளிதில் சொல்லிவிட முடியாத பகிரங்க வாக்குமூலம்.

நாம் பெற்ற விடுதலை வெளிநாட்டவரிடமிருந்து பெற்றதாகும். உண்மையான விடுதலை கிடைக்க வேண்டுமென்றால் பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும் நாம் விடுதலை பெறவேண்டும் என்பதை அடிகளார் சுட்டிக்காட்டுகிறார்.

இளைஞர்கள் எண்ணினால், இந்தியாவைத் தூக்கி நிறுத்த முடியும் என்பது அடிகளாரின் ஆழமான நம்பிக்கை. அவர் குறிப்பிடும் எடிசன் பற்றிய சம்பவம் தொய்வுறுகிறவர்களுக்குத் தூண்டுகோலாக இருக்கும்.

அடிகளார் கருத்தாளர் மட்டுமல்ல; செயல்வீரரும் கூட! நாகை மாவட்டத்தை, சுனாமி சுழற்றி அடித்தபோது, காவி உடையோடு சடலங்களைத் தூக்கி அப்புறப்படுத்துவதில் முதல் வரிசையில் நின்ற போராளி. அவர் பெரிய புராணம் குறிப்பிடும் தொண்டு என்பதையே தோள்களில் ஏற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் சமகால ஞானி. அதனால் அவர் நூல் முழுவதும் மனிதநேயப் பண்புகளையே தூக்கிப் பிடிக்கிறார் .திருமந்திரத்தின்மூலம் அதை நம் காதுகளில் கிசுகிசுக்கிறார். ஏற்றத்தாழ்வில்லாத சமூகம் அவரது தொலைநோக்குப் பார்வையாக இருக்கிறது.

"நிஜங்கள் கதைகளாகும்போது காவியங்களாகின்றன" என்கிற வரிகள் அற்புதமாக வந்து விழுந்திருக்கின்றன. மேரி ஃப்ளோரா என்கிற மலர்வதியின் புதினத்தை அவர் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். பெரியாரின் பண்பாட்டையும் அடிகளார் குறிப்பிடுகின்றார். பகுத்தறிவின் அடையாளமாக இருந்த பெரியார் மரபுகளை மதித்தவர் என்பதை ஆதாரபூர்வமாக அவர் விளக்குகிறார்.

'உயிர் நாரில் தொடுத்த மாலை' என்கிற கட்டுரையே இந்நூலின் இறுதிக்கட்டுரை. அதில் தன் வாழ்வைப் பற்றிய உண்மைகளை முன்வைக்கிறார். தொடக்கத்திலிருந்த அடக்கத்தைக் குறித்தும்,





அச்சத்தைக் குறித்தும் எழுதுகிற அவர், முற்றிலும் மாறிய ஒரு வாழ்க்கையை முழுவதுமாக ஏற்றுக்கொண்ட மனமாற்றத்தைப் பற்றி எழுதுகிறார். இன்று சின்ன மாற்றத்தையும் தாங்கிக் கொள்ளாத இளைஞர் சமுதாயம் அதை ஊன்றிப் படித்தால் நாம் பெற்றிருப்பவற்றிற்காக இருத்தலுக்கு நன்றி சொல்வோம் என்பது உண்மை.

இந்த மாலை, வண்ண மாலை; வாடா மாலை; வளம் தரும் மாலை; நம் உள்ளத்தை எப்போதும் நறுமணமாக்கும் வசந்த மாலை!

# உயிர்நாரில் தொடுத்த மாலை



வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது!

துறவு வாழ்வில் 20 ஆண்டுக்கால நிறைவு! 49 ஆண்டுகள் வாழ்க்கைப் பயணம் நிறைவுற்று 50ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் பயணம்! எப்போதும் பிறந்த நாளை நாம் சிந்திப்பதில்லை. ஏன் பிறந்தோம்? என்ன சாதித்தோம்? என்ற கேள்விகள் நமக்காகக் கேட்கப்படுவதில்லை.

மண்ணோடு உறவு கொண்டு, மரம் மலர்களை, காய்களை, கனிகளைத் தருவதுபோல, மழை எந்த உயிரினத்தையும், எவரையும் விலக்காது எல்லோருக்கும் பொழிவதைப்போல, காற்று தன் கடமையைக் கணப்பொழுதும் சோர்விலாது நிறுத்தாததைப்போல, எப்போதும் எதற்கும் சலனப்படாது, பூமிப்பந்து தன் சுழற்சியைத் தொடர்வதைப்போல, மனிதவாழ்க்கைப் பயணம் இயக்கம் சார்ந்தது! இரைப்பை நிறைய உண்பதும், இமைகள் மூடி உறங்குவதும், வாழ்வின் முதற்கடமை



ஆகிவிட்ட நிலையில், வாழ்வில் கடமைகளை, பணிகளைப் பற்றிச் சிந்திக்க அவகாசம் எத்தனை பேருக்குக்கிடைக்கின்றது?

ஒவ்வொரு மனித வாழ்விலும் தாக்கங்கள், திருப்புமுனைகள் உண்டு!

நம் வாழ்விலும் அது நிகழ்ந்தது!

நமது சின்னஞ் சிறுவயதில் மகாசன்னிதானம் மதுரைக்கு எழுந்தருளும்போது, சில வேளைகளில் வணங்கி ஆசிபெற்றது உண்டு!

சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பு (1985இல்) குன்றக்குடித் திருமடத்தின் மேல் மாடியில் மகாசன்னிதானத்தைத் தரிசனம் செய்தோம்.

படித்துப் பட்டம் பெற்ற கையோடு குன்றக்குடி வந்து மகாசன்னிதானத்தின் திருவடிகளில் விழுந்து வணங்கி ஆசி பெற்றோம்.

திருமடத்தின் மேல்மாடியில் மகாசன்னிதானத்தை நேராகப் பார்த்த முதல் சந்திப்பு! வீழ்ந்து வணங்கினோம். திருநீற்றுப் பிரசாதம் பெற்று ஆசி பெற்றோம்.

மகாசன்னிதானம் ஆழமான அருட்பார்வையால் சற்றுநேரம் நம்மை அன்பாக, ஆழமாக ஊடுருவிப் பார்த்தார்கள்.

அமைதிப்பார்வை!
அன்புப் பார்வை!
அருட்பார்வை!
சிறிது மௌனம்!
நம் மேனி சிலிர்த்தது!

சில கேள்விகளால் நம்மை விசாரித்தார்கள். விடை சொன்னோம். வீழ்ந்து வணங்கி விடைபெற்றோம். பிறகு...

மகாசன்னிதானத்தின் உரைகளை, தூர நின்று ஒரு ஏகலைவனைப்போலக் கேட்பதும், மகாசன்னிதானத்தின்

தொலைபேசிவழி உத்தரவுகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதும் நம் வாழ்க்கை ஆயிற்று.

மண்டைக்காடு மதக் கலவரத் தீயை, மகாசன்னிதானம் அணைத்த பிறகு, "மனிதநேய மகாத்மா" என்று மகாசன்னிதானத்தை எண்ணி நாம் எழுதிய கவிதை, நம்மால் தொடங்கப் பெற்ற 'மணமலர்' என்ற இதழில் வெளியாயிற்று.

**காந்தியடிகள் காலம்**
**புத்தரின் காலம் என்பதைப்போல,**
**அடிகளின் காலம்**
**என்பதை வரலாறு வாசிக்கும்!**

என்று நிறைவுபெற்றது அந்தக் கவிதை.

அடிகளின் தமிழைச் சுவாசிப்பதே நம் வாழ்க்கை ஆயிற்று. இந்தக் கவிதையை மகாசன்னிதானம் கடைசிவரை வாசிக்கின்ற வாய்ப்பு இல்லை.

குன்றக்குடியில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் சிவகங்கையில் தயாரிக்கப்படும் நமது பிரியதர்சினி டி.வி. உட்பட அனைத்தையும் விற்பனை செய்ய, 'குன்றக்குடி சிறப்பங்காடி' என்ற பெயரில் மதுரையில், ஒரு மையம் 03.09.1989 அன்று தொடங்கப்பெற்றது.

குன்றக்குடி சிறப்பங்காடி விற்பனை மையத்தின் தொடக்கவிழாவில் மகாசன்னிதானம் குத்து விளக்கு ஏற்றித் தொடங்கிவைத்தார்கள். அப்போதைய மதுரை மாவட்டத் தொழில் வணிகத்தலைவர் திரு. ஜெட்டலால் சோலன்கி, திருக்குறள் பேரவைப் பொதுச்செயலர் திரு. ந.மணிமொழியன், மதுரை மாவட்டத் திருக்குறள் பேரவைத் தலைவர் திரு. கருணைதாசன், காவல்துறை கண்காணிப்பாளர் திருக்குறள் பெருமாள், கூட்டுறவுத்துறை இணை ஆணையர் திரு. அய்யாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில், சுருக்கமாகவே நாம் வரவேற்புரை ஆற்றினோம். நமது வரவேற்புரையை மகாசன்னிதானம் ஆழமாய் உற்று நோக்கினார்கள். நமது வரவேற்புரைக்குப் பிறகு, வாழ்த்துரை வழங்கிய அனைவரும்





நம்மைப் பாராட்டினார்கள். குறிப்பாகத் தொழில் வணிகக் கழகத் தலைவர் மகாசன்னிதானத்திடம், உங்கள் பணியாளர் கணேசனை எங்கள் நிறுவனத்திற்குத் தாருங்கள்" என்று மேடையில் பேசும்போது குறிப்பிட்டார். பொதுவிழாவில் நமது கன்னிப்பேச்சு. மகாசன்னிதானம் கேட்ட முதல் பேச்சும் அதுதான்!

பாபர் மசூதி இடிக்கப்பட்ட தருணம். திருவருட் பேரவை, நல்லிணக்க அமைதி ஊர்வலம் மதுரையில் நடத்த மூன்று நாட்கள் மகாசன்னிதானம் மதுரையில் முகாம்!

மகாசன்னிதானம் விழி அசைத்தும், விரல் அசைத்தும் இட்ட பணிகள் அனைத்தும் நிறைவேற்றினோம்.

சமய நல்லிணக்க அமைதி ஊர்வலத்திற்குப் பிறகு மகாசன்னிதானத்தின் கவலை சற்று குறைந்ததாகத் தெரிந்தது.

சில ஆண்டுகளுக்குப் பின், நெல்லையில் இருந்து குன்றக்குடிக்கு வரும் வழியில், மதுரையில் மகா சன்னிதானத்தின் திடீர் தங்கல். நமக்கு அவசர அழைப்பு. தங்குமனையில் காலை 10 மணிக்குத் தொடங்கிய உரையாடல், மாலை 6 மணி வரை நீடித்தது.

நம்மை ஆற்றுப்படுத்தினார்கள். மாலை பொதுக் கூட்டத்திற்கு உடன் அழைத்துச் சென்றார்கள்.

"சிறிய வட்டத்தைவிட்டு வெளியே வா! உலகம் பெரியது. உனக்காகப் பணிகள் காத்திருக்கின்றன!"

மகாசன்னிதானத்தின் அழைப்பு!

'பெரிய பணிகளைச் செய்ய வலிமையும், வல்லமையும் நம்மிடம் இல்லையே' என்று தாள் பணிந்து மறுத்தோம்.

"குளவி, புழுவைக் கொட்டிக் கொட்டிக் குளவியாக மாற்றுவதைப்போல, உன்னை என்னால் மாற்றிவிட முடியும்" என்றார்கள்.

நாம் மௌனமாக இருந்தோம்.

மகாசன்னிதானம் ஆசீர்வதித்தார்கள்.

சில மாதங்கள் கழித்து, அலுவலகப் பணி நிமித்தம் குன்றக்குடி சென்றோம். அன்று மகாசன்னிதானத்தின் ஞானபீட நாள் என்பது அங்கு சென்றபொழுதுதான் நமக்குத் தெரிந்தது.

தமிழகம் முழுவதிலும் இருந்து ஏராளமான அறிஞர்கள், சான்றோர்கள் திரளாக வந்திருந்தார்கள்.

நாம் வந்தது அறிந்து, நம்மை மகாசன்னிதானம் திருமடத்தின் மேல்மாடிக்கு உடனே வரும்படி உத்தரவு. மேல்மாடியில் மகாசன்னிதானத்தைக் கண்டு விழுந்து வணங்கி ஆசிபெற்றோம்.

“இன்றிலிருந்து இப்பொழுதிலிருந்து திருமடத்தில் இருந்துவிடலாம்” என்பது மகாசன்னிதானத்தின் உத்தரவு.

“இப்பொழுது அதற்கு அவசரம்இல்லையே” என்று தயங்கித் தயங்கிக் கூறினோம். மகாசன்னிதானம் ஆணை பிறப்பித்தார்கள்.

அன்றே திருமடத்தின் மரபுகளின்படி காளத்திநாதர் சன்னிதியில் விழுந்து வணங்கி வழிபாடு செய்து, பூசை மடத்தில் யாத்திரை காஷாயம் பெற்று மகாசன்னிதானத்தின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆசி பெற்றோம்.

**நானேயோ தவம் செய்தேன்**
**சிவாய நம எனப் பெற்றேன்**

என்ற பெரும்பேறு நமக்கு வாய்க்கப்பெற்று, துறவு வாழ்க்கை தொடங்கியது.

நாம் துறவு மேற்கொண்டதும், மதுரையில் இருந்து நமது பூர்வாசிரமத் தாயும், தங்கையும் அவசரமாக, பதறிக்கொண்டு வந்தார்கள். அவர்களைச் சமாதானம் செய்தோம். அவர்கள் அமைதி அடையவில்லை. நம்மை அழைத்துப்போவதற்காக, நாம் அணிந்த பழைய வண்ண உடைகளைக் கையில் எடுத்து வந்திருந்தார்கள்.

“பூர்வாசிரமத்தில் அடிக்கடி உடைகளை மாற்றிக் கொள்வதற்குக் கோபப்படுவீர்களே! இப்போது ஒரே உடைக்கு (காவியுடைக்கு) மாறி-





விட்டேன். இனி உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்..” என்று தாயிடம் கூறினோம்.

“ஓ...” என்று கதறி அழுதுகொண்டு, “எத்தனை உடைகளை வேண்டுமானாலும் மாற்று... நாங்கள் துவைத்துப் போடுகின்றோம்... எங்களோடு வந்துவிடு” என்று தாயும் தங்கையும் கால்களைப் பிடித்துக் கதறினார்கள். நாம் சமாதானப் படுத்தி அவர்களை அனுப்பி வைத்தோம்.

ஊருக்குள் சென்ற பின்பும் அந்தத் தாய் நாம் அணிந்திருந்த பழைய ஆடைகளைப் பொக்கிஷமாய்ப் பேணிக் காத்தார். தினந்தோறும் மடிப்புக் கலையாமல் ஆடைகளை எடுத்துப்பார்த்து, மடித்துவைத்து, அந்த ஆடைகளை அணைத்துக் கொண்டு, அதனோடு பேசி, மீண்டும் மடித்துவைப்பார்! மரணத்தின் கடைசி நொடி வரை அந்த ஆடைகளைத் தொட அந்தத்தாய் எவரையும் அனுமதிக்கவில்லை. அந்த ஆடைகளில்தான் அவர் மகன் அவரோடு வாழ்வதாக அந்தத் தாயின் நம்பிக்கை.

துறவு மேற்கொண்ட சில நாட்களில் சொந்த உறவாய் இல்லாமல், வந்த உறவாய் ஒருவர் வந்தார். அவர்தான் தெரு ஓரத்துத் துப்புரவுத்தொழிலாளர் சண்முகவேல்.

பூர்வாசிரமத்தில் மதுரையில் இருந்தபொழுது அதிகாலைப் பொழுதுகளில் நாம் தேநீர் அருந்தும்போது அவருக்கும் தேநீர் வாங்கித் தருவோம். எப்போதும் காக்கிச் சீருடையில் இருந்த அந்தத் துப்புரவுத் தொழிலாளத் தோழர் சண்முகவேல் பட்டு வேட்டி, பட்டுச் சட்டை அணிந்து நம்மைப் பார்க்கத் திருமடத்திற்கு வந்திருந்தார். நமக்கே அவரை அடையாளம் காணச் சில நொடிகள் பிடித்தன.

நம்மைப் பார்த்ததும், “ஓ” என்று கதறி அழுது மண்ணில் கீழே விழுந்து புரண்டு அழுதார்.

மண்ணாகிப்போன பட்டு உடையுடன் எழுந்து நின்றவர், “சாமி... தெருவுக்கே அலங்காரமாய்த் தேர் அசைந்து வருவதுபோல் கம்பீரமாய் வருவீர்களே..! ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று வேறுபாடு பார்க்காம எங்க எல்லாரையும்

அரவணைத்து உதவி செய்வீர்களே..! நீங்க நடந்த தெருவைத்தூய்மை செய்ய நான் இருக்கேன்..! இப்போ எங்க மனசைத் தூய்மை செய்ய அங்க யார் இருக்காக?" என்று கதறி அழுதார்.

"என் கல்யாணத்திற்குக்கூடப் பட்டு வேட்டி, பட்டுச் சட்டை கட்டலை..! பெரிய இடத்துல உங்களைப் பார்க்க வரும்போது, உள்ளே விடுவாங்களோ? மாட்டாங்களோ? என்று தான் பல வருடங்களுக்கு முன் மடித்துவைத்த பட்டு வேட்டி சட்டையைக் கட்டி வந்தேன்.. சாமி!"

"என்னை மன்னிக்கனும்.." என்று மீண்டும் விழுந்து வணங்கினார்.

"சண்முகவேல்! இது ஏழை மடம். ஏழைகளின் மடம். இங்கே எல்லாரும் ஒண்ணு..! அதனால்தான் இங்கே வந்தேன்! இங்கே இருக்கேன்!" என்று கூறி, பந்தியில் உணவு சாப்பிடச் சொன்னோம்.

விக்கி விக்கி அழுதுகொண்டே, பாதி சாப்பிட்டும் சாப்பிடாமலும் கை கழுவி விடைபெற்றார் சண்முகவேல்.

அவர் விடை பெறும்பொழுது, ஏதோ சில்லரைக் காசுகளைத் தேடினோம். "எதுவும் வேண்டாம் சாமி... விபூதி மட்டும் தாருங்கள் போதும்" என்று கூறி விழுந்து வணங்கி, பக்கத்தில் இருந்தவரிடம், "சாமியை நல்லாப் பாத்துக்கங்க.." என்று சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றார் சண்முகவேல். அன்று பார்த்த சண்முகவேலை இன்றுவரை பார்க்க வாய்ப்பு இல்லை. பார்க்க முடியவில்லை.

குன்றக்குடி ஆதீனத்தின் காளத்திநாதர் சன்னிதியில் ஆதீன வழக்கப்படி யாத்திரை காஷாயம் பெற்று, கந்தசாமிப் பரதேசியானபின், குருமகாசன்னிதானம் நமக்கு, சமயதீட்சை, விசேட தீட்சைகள் அளித்து, உடையவர் காளத்திநாதர் எழுந்தருளல் முதலியன செய்தும், ஆதீன சம்பிரதாயப்படி மந்திர காஷாயம் அளித்தும், பூசைத்தம்பிரான் ஆக்கியும், 'கந்தசாமித்தம்பிரான்' என்ற திருநாமம் நமக்குச் சூட்டினார்கள்.

பின்னர் நமக்கு, (கந்தசாமித் தம்பிரானுக்கு) ஆச்சார்ய அபிஷேகம் செய்வித்து, சுந்தரவேடம், ஆறுகட்டி முதலியன வழங்கி, 'ஸ்ரீமத்





பொன்னம்பல தேசிகர்' என்ற திருநாமத்தில், சின்னப்பட்டமாக (ஆதீன இளவரசு) நியமனம் செய்து அருளினார்கள்.

நமக்கு, அப்பனாக, அம்மையாக, அய்யனாக, எல்லா நிலைகளிலுமாக இருந்து, நம் நெஞ்சைத் துறப்பித்து மகாசன்னிதானம் அவர்கள் நம்மை வழி நடத்தினார்கள்.

மழலையின் கையில் பொற்கிண்ணம்போல், நம் நிலை.

மகாசன்னிதானம் தாயினும் சாலப்பரிந்து நம் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி நம்மை ஆட்கொண்டு அருளினார்கள்.

உலகில் எவருக்கும் வாய்க்காத ஒப்பற்ற குருமணியை நாம் பெற்றதே நம் வாழ்வில் பெரும்பேறு.

தாயைப் பின்தொடரும் கன்றைப்போல், மகாசன்னிதானத்தைப் பற்றிக் கொண்டு பயணம் தொடர்ந்தது.

**கண்ணால் யானும் கண்டேன் காண்க**
**சிவன் என யானும் தேறினன் காண்க**

திருப்பெருந்துறையில் மானுடச்சட்டை தாங்கி இறைவன் சிவபெருமான் மணிவாசகருக்குக் கணப்பொழுதில் காட்சியருளி மறைந்து போனார்.

நமக்கோ எல்லாநிலைகளிலும் வழிகாட்டி ஆட்படுத்தி அருளிய மகாசன்னிதானம் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பரிபூரணம் அடைந்த பின்பும், எப்பொழுதும் நம் எல்லாப் பணிகளிலும் தோன்றாத் துணையாய் நின்று நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு (02.12.2012) பாரி ஆண்ட பறம்புமலை அடிவாரத்தில் நம் வள்ளல்பாரி மேல்நிலைப்பள்ளியின் புதிய கட்டடங்கள் திறப்புவிழா மற்றும் பள்ளி ஆண்டுவிழாவில் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் திரு. முத்துச்செழியன் அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார்கள். உரையாற்றும்போது, "நான் துணைவேந்தராக இங்கு வரவில்லை. இப்பள்ளியின் பழைய மாணவராகத்தான் வந்திருக்கிறேன். நான்

இங்கு நுழையும்பொழுது இந்தப் பள்ளியின் மண்ணைத் தொட்டு வணங்கி என் தாய்வீட்டிற்குள் நுழைவதைப்போல் மகிழ்கின்றேன். சின்னஞ்சிறு வயதில் இந்தப் பள்ளியில் ஆடிப்பாடி மகிழ்ந்த நாள்கள் நினைவுக்கு வருகின்றன. நான் பயிலும் பள்ளிக்குப் போதிய கட்டட வசதி இல்லை. கோயில் வளாகத்திலும் பள்ளி நடைபெறும். இன்று இவ்வளவு கட்டடங்கள், பல்கலைக்கழக வளாகத்திற்குள் வந்ததுபோல் நான் உணர்கிறேன். இவ்வளவு கட்டடங்கள் ... இவ்வளவு கருவிகள்.... உங்களுக்குக் கிடைத்திருப்பது நல்வாய்ப்பு. நாம் அடிகள் செய்த பெருந்தவத்தால் இந்த மாற்றங்கள் நிகழ்ந்து இருக்கின்றன. அதற்காகவே நீங்கள் நன்கு படிக்கவேண்டும்" என்று உரையாற்றினார்.

விழாவில் அப்போது, நமது நினைவுகள் பின்னோக்கிச் சென்றன. இந்தப் பள்ளிவளாகத்தில் நம் மகாசன்னிதானம் சுதேசி விஞ்ஞான இயக்கம் சார்பில் அறிவியல் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். போதிய கட்டட வசதி இல்லை என்ற காரணத்திற்காக, கடைசிநேரத்தில் அந்த அறிவியல் கண்காட்சி பிரான்மலை அரசுத் தொடக்கப்பள்ளிக் கட்டடத்தில் நடைபெற்றது. மகாசன்னிதானத்தின் ஆழ்ந்த வருத்தத்தை நம்மால் உணர முடிந்தது.

மகாசன்னிதானம் பரிபூரணமாகிய சில ஆண்டுகளில் பறம்புமலை வள்ளல் பாரி மேல்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றன.

08.07.2002 அன்று பள்ளியின் முதல் புதிய கட்டடத் திறப்புவிழா! ஊரே விழாக்கோலம் பூண்டது. ஊர் மக்கள் பள்ளிக் கட்டடத்திறப்புவிழாவைத் தங்கள் சொந்த வீட்டு விழாவாகக்கருதிப் பங்கெடுத்தார்கள். புதிய கட்டடம் திறப்பு விழாவிற்குத்தயாராக இருந்தது.

கட்டடத் திறப்புவிழாவன்று அதிகாலையில் நமக்குத் தொலைபேசிவழி ஒரு செய்தி, தயங்கித் தயங்கி உதவியாளர் ராமசாமி தெரிவித்தார்.

நம்மிடம் ஒரு நிமிடம் அமைதி. மௌனம். பின் இயல்பான பணிகளைத் தொடர்ந்தோம்.





அடுத்துத் தொலைபேசி ஒலித்தது. வள்ளல்பாரி மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பேசினார்.

"கட்டடத் திறப்புவிழா நடத்தலாமா?" என்று கேட்டார்.

"ஏன்? விழாவிற்கு என்ன...?" என்று கேட்டோம்.

தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொன்னார்.

"உங்களுக்குத் தெரிந்த இந்த விஷயத்தை யாருக்கும் சொல்ல வேண்டாம்..." என்று வாக்குறுதி பெற்றுவிட்டு, "விழா, கண்டிப்பாக நடைபெறும்" என்றோம்.

"நீங்கள் விழா வேலைகளைக் கவனியுங்கள்" என்றோம்.

பள்ளியின் புதிய கட்டடத்திறப்புவிழா கோலாகலமாகத் தொடங்கியது! பள்ளியின் புதிய கட்டடத்தைப் பார்த்துத் தங்களின் சொந்தக்கட்டடம் கட்டியதுபோல் ஊர்மக்கள் பரவசத்தில் திளைத்திருந்தனர்.

அந்நாளைய சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.கே. உமாதேவன் கட்டடத்தைத் திறந்து வைத்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராம. அருணகிரி, குன்றக்குடி கிராமத் திட்டக்குழுத் தலைவர் விஞ்ஞானி முனைவர் திரு. கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நாம் உரையாற்றும்பொழுது, இப்படித்தான் தொடங்கினோம்.

"தாய்ப்பால் குடித்த உணர்வைவிட, மகா சன்னிதானத்தின் தமிழ்ப்பால் குடித்த உணர்வில்தான் இந்த அரங்கத்தில் இந்த விழாவில் உரையாற்றுகின்றோம்...!" என்று குறிப்பிட்டோம்.

புதிய பள்ளிக் கட்டடத்தில் குத்துவிளக்கு ஏற்றி வைக்கப் பட்டது. பிரான்மலையில்!

அதே நேரத்தில் நம்மை மணிவயிற்றில் சுமந்த தாயின் இறுதி ஊர்வலம் மதுரையில்!

சிதையில் தாயின் உடலில் நெருப்பு மூட்டும் அதே நேரத்தில், ஏழைப்பிள்ளைகளின் கல்விக் கோயிலில் குத்துவிளக்கின் ஒளி வெள்ளமாய்ப் பரவியது!

"இனி வரமாட்டேன்" என்று சொல்லிவிட்டுப் போன அம்மா, ஏழைப் பிள்ளைகளின் கல்விக் கோயிலில் வெளிச்சமாய் ஒளிர்கின்றாள்..."

வானத்தில் இருந்து மழைத்தூறல்கள் மலர்களாய்த் தூவின.

"பறம்புமலை வள்ளல்பாரி மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டட வசதி இல்லையே.." என்ற மகாசன்னிதானத்தின் ஏக்கமும், வருத்தமும் மறைந்தது.

வான்மழைத்தூறல்களின்வழி மகாசன்னிதானம் வாழ்த்துவதை நம்மால் உணரமுடிந்தது.

மகாசன்னிதானத்தின் நினைவுகள் நம் உயிரிலும், உணர்விலும் நிறைந்திருந்தன.

எவரும் அறியாமல் நம் கண்களில் நீர்த்துளிகளும், மழையின் துளிகளும் இரண்டறக் கலக்கின்றன.

**அற்றேமென்று அல்லற்படுபவோ பெற்றேமென்று**
**ஓம்புதல் தேற்றா தவர்**

துறவு என்பது இருந்ததை எல்லாம் இழப்பது மட்டும் அல்ல! இழந்தோம் என்று எண்ணிப் பாராமல் இருப்பதும்தான்!


அந்தப் பக்குவநிலையைத் திருவருளும், மகாசன்னிதானத்தின் குருவருளும் நமக்குத் தொடர்ந்து வழங்கப் பிரார்த்திக்கின்றோம்.

உயிர் நாரில் தொடுக்கப்பட்ட இந்த மாலை, மகாசன்னிதானத்தின் திருவடிகளுக்குச் சமர்ப்பணம்!!

❁

# Breaking barriers

## The story of how religious institutions and leaders broke rules to provide relief to the tsunami victims in Tamil Nadu.



S. VISWANATHAN

RELIGIOUS bigotry often hampers unity and causes tension among communities, but there have been occasions when certain sections of religious institutions rise above prejudices and unite for the service of humanity. This happened tellingly in Nagapattinam district in the aftermath of the tsunami, when churches, mosques and temples broke with tradition to help the hapless people.

Velankanni, located 10 km away from Nagapattinam, houses the magnificent 17th century shrine, the basilica of Our Lady of Health. Known as the "Lourdes of the East," Velankanni attracts not only Catholic pilgrims but also people of other religions from all over the world. On December 26, the numerous lodging houses in the town were overflowing with pilgrims, who had gathered for the special Christmas mass. The killer waves hit when the mass was being held in Malayalam. (The shrine holds mass in Tamil, Telugu, Malayalam and English on specified days.) Hundreds of pilgrims, including many children, were taking a dip in the "holy" sea and scores of children of the local communities were playing close to the sea. Shops lining the shore were crowded with pilgrims looking for mementoes. Most of these people had no chance against the giant waves.

In the first count, there were more than 800 bodies. Half of them could be pilgrims, said Very Rev. Fr. P. Xavier, rector of the parish. Bodies lay scattered in front of the church and in other areas as well. For the police, government officials and volunteers from non-governmental organisations, including some associated with the church, the immediate challenge was to remove the bodies and admit the injured to hospital. Messages for manpower went out to several places and among those who responded were the *dargah* at Nagore, 20 km away, which draws many Hindu pilgrims too, and the Hindu mutt at Kundrakudi, in Sivaganga district, more than 150 km away. A 100-member team of volunteers from Kundrakudi led by Ponnambala Adigal, the head of the mutt, and a 15-member team of Muslim youth from Nagore, also a tsunami-affected village, worked with local people and volunteers from many districts to bury the dead.

They also helped clear the debris to open up the roads for vehicles. Ponnambala Adigal, who stood tradition on its head by visiting the affected people, said he was only following in the footsteps of his predecessor, Kundrakudi (Deivasigamani Arunachala Desiga Paramacharya) Adigal, in rushing to help the suffering masses. He called the services of Kundrakudi Adigal during the Mandaikkadu communal riots in Kanyakumari district in the late 1970s, when Hindus boycotted Christian fishermen. The senior Adigal helped fishermen resume sale of fish, by himself taking out a fish and launching the sale. "The killer waves did not discriminate between man and man. May humans also close ranks to face the challenge," said Ponnambala Adigal, who also distributed food materials and clothes.



BY SPECIAL ARRANGEMENT

Ponnambala Adigal on a relief mission.


Rector Xavier said the church had provided for the stay of the victims belonging to all religions. Its canteen provided food to the affected people and relief materials were pouring in from different parts of the country and from abroad, he said.

The Parankippettai Islamic Ikkya Jamaat rushed to the help of people around the little town near Chidambaram, another popular pilgrim centre. Within minutes of the information reaching them the Jamaat Committee launched massive relief operations in places such as Chinnur, Indira Nagar, Puduppettai, Pudukuppam and Velingarayanpettai.





PICTURES: PUDUVAI ILAVENIL



**(Clockwise from above) the Velankanni church, the Nagore dargah and the Siva temple in Thirumalai Rayan Pattinam.**

Youth of the community, numbering about 5,000, rescued many people and arranged for the hospitalisation of the injured. An ambulance gifted to the Jamaat by a Singapore-based devotee came in handy for the purpose. The volunteers saved about 400 people.

"Our boys joined the efforts of the district administration in rescuing people and recovering bodies," said O.A.W. Bawajan, secretary of the Jamaat. They also took up relief operations. "We now take care of about 15,000 displaced people of different religions," he said. They are being sheltered in four camps and are fed by the amaat using its own funds and donations from people attached to the aamat.

"We have provided for the stay of ur non-Muslim brethren in our nosque," said Bawajan. "For us, huan lives are more important than the nctity of places of worship," he lded.

In Nagore also, where hundreds of ople died and a large number of families were displaced, the Saint Hazrath Saiyed Shahul Hameed Qadir Oli Dargah, which attracts pilgrims from all communities, did remarkable service, say the local people. The dargah provided shelter to about 4,000 people and its volunteers played a key role in retrieving bodies, arranging for burial or cremation, and providing assistance to the survivors. Relief materials were received from hundreds of regular visitors to the *dargah* from all over the country and distributed to the victims. About 250 bodies of fishermen and others, including 18 Hindus killed by the tsunami, were buried in the *dargah* compound, relaxing the religious rules, said a spokesperson of the *dargah*.

Temples in several places have also been serving as camps for the victims. At Thirumalai Rayan Pattinam in Karaikkal, the affected fishermen from Pattinacherry were accommodated in a Siva temple. A camp office of the Pondicherry government is functioning from there. One of the trustees was seen distributing kerosene stoves to the families sheltered in the temple. ■

இந்தியாடுடே 16/5/12

குன்றக்குடி ஆதீனம்

# மக்கள் சேவையில் செம்மை

கல்வி மற்றும் சமூக சேவைகளில் குன்றக்குடி முக்கிய இடம் வகிக்கிறது. நாடு முழுவதிலும் இதற்கான நன்மதிப்பு அதிகம்.

சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடிக்கு அருகே 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குன்றக்குடியில் அமைந்திருக்கிறது ஊரின் பெயரையே தாங்கியுள்ள குன்றக்குடி ஆதீனம். முதலில் இந்த மடம் திருவண்ணாமலையில் இருந்தது. பின்னர் அங்கிருந்து பிரான்மலைக்கு சென்றது. அதன் பின்னர் குன்றக்குடி வந்து நிலைத்துவிட்டது. அதனால் குன்றக்குடி-திருவண்ணாமலை ஆதினம் என்று பெயர் பெற்றுவிட்டது.

தற்போதுள்ள 18 ஆதீனங்களிலும் சர்ச்சைகள் எதிலும் சிக்காமலும் அனைத்து தரப்பு மக்களிடமும் பெரு மதிப்பு பெற்றதாகச் சென்றது. 1977ல் குன்றக்குடி திட்டக் குழு உருவாக்கப்பட்டது. கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. குன்றக்குடி ஒரு முன்மாதிரி கிராமமாக மாறியது. இதை பத்திரிகைகள் வாயிலாக அறிந்த அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, தான் விரும்பும் முன்மாதிரி கிராமம் இதுதான் என்று 1984ல் கூறினார்.

1995 ஏப்ரல் 15ல் அடிகளார் காலமானார். அதன் பின்னர் தற்போதைய ஆதீனம் பதவிக்கு வந்தார். குன்றக்குடி ஆதீனம் சார்பாக 13 பள்ளிகள், 2 தொழிற் பயிற்சி மையங்கள், 2 கல்லூரிகள் உள்ளன.



சமூக சேவைக்காக மதிக்கப்படும் குன்றக்குடி ஆதீனத்தில் தலைமுறை மாற்றம் சுமுகமாக இருந்தது.

வும் இருப்பது குன்றக்குடி ஆதினம்தான். இது வரை 45 ஆதீனங்கள் இருந்திருக்கின்றனர். தற்போது இருப்பவர் 46வது ஆதீனம். தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாச்சார்ய சுவாமிகள். 45வது அடிகளான தெய்வசிகாமணி அருணாசல தேசிக பராமாசார்ய சுவாமிகளின் காலம் குன்றக்குடி ஆதீனத்தின் பொற்காலம் எனலாம். 1969ல் தி.மு.க ஆட்சியில் இவர் சட்டமன்ற மேலவை உறுப்பினராக (எம்.எல்.சி) நியமிக்கப் பட்டார். குன்றக்குடி ஒரு சிற்றூராட்சி கிராமம். மலிவு விலை மதுக் கடைகள் திறக்கப்பட்டபோது இங்கு அதற்கு தடை விதித்து, உயர் நீதிமன்றம் போய் வெற்றி பெற்றார். பஞ்சாயத்து தலைவராக இருந்த ஒரே மடாதிபதி குன்றக்குடி அடிகளார்தான்.

அடிகளாரின் முழு கவனமும் குன்றக்குடி கிராமத்தை அபிவிருத்தி செய்வதில் புயல், வெள்ளம், தீ விபத்துகள் போன்ற இயற்கை பேரிடர்கள் நேரும் சமயங்களில் நாடெங்கும் சென்று குன்றக்குடி கிராம திட்டக் குழுவின் உறுப்பினர்கள் பணியாற்றுகிறார்கள். மதக் கலவரங்கள் நடக்கும் இடங்களுக்கும் சென்று அவர்கள் சமுதாயப் பணியாற்றுகிறார்கள்.

சமுதாயப் பணியில் மற்ற எல்லா ஆதீனங்களையும் விட குன்றக்குடியே முன்னணியில் உள்ளது. 2004 சுனாமியின் போது குன்றக்குடி அடிகளாரும் அவரது சீடர்களும் ஓடோடிச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்தது பலராலும் போற்றப்பட்டது. மோசமாக பாதிக்கப்பட்ட நாகப்பட்டினத்தில் பிணங்களை எரிக்கும் செயலில்கூட குன்றக்குடி ஆதீனமே முன்னணியில் நின்று பணி புரிந்தது மறக்க முடியாதது.

**219**

மு. சுந்தரமூர்த்தி - கும்பகோணம்.

மனிதர்களுக்காக மரபுகளா? மரபுகளுக்காக மனிதர்களா?

வாழும் சம்பவம் ஒன்று சொல்லட்டுமா?

தமிழ்நாட்டு ஆதீனங்களுக்கென்று சில மரபுகள் உண்டு.

உயிரற்ற சடலத்தை குருமகாசந்நிதானம் கண் கொண்டு காணலாகாது என்பதும் அதில் ஒன்று.

தன்னை ஈன்ற தாய் உயிர் கழிந்து கிடந்த போதும் காணவோ கடமை செய்யவோ செல்லவே இல்லை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.

ஆனால் கடல் வலை வீசி மனிதர்களைப் பிடித்துத் தின்றதே ஒரு சுனாமியில்- அதில் புதரிலும் முள்ளிலும் கரையிலும் ஒதுங்கிய சடலங்களை எல்லாம் தேடித்தேடி எடுத்துப் பூமியில் புதைத்தவர் பொன்னம்பல அடிகளார்.

இந்த நிகழ்வை அறிந்ததும் கண்மூடி அவர் உருவத்தை நெற்றியில் நிறுத்தி வணங்கினேன்.

சராசரி மனிதர்கள் மரபுகளுக்குக் கட்டுப் படுகிறார்கள்; மாமனிதர்களுக்கு மரபுகள் கட்டுப் படுகின்றன.

'குமுதம்' வார இதழில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் கேள்வி பதில் பகுதியில் வெளிவந்து பின்னர் "கவிப்பேரரசு வைரமுத்துவின் "பாற்கடல்" நூலில் வெளியான பகுதி. 'கவிப்பேரரசு வைரமுத்துவின் பதில்"

1/8/12

மூணுநாள் கழிச்சு எடுத்துச் சுட்டுவெரல்ல சுண்டிப் பாத்தா சும்மா கோயில்மணி மாதிரி 'ணங்கு' 'ணங்கு' 'ணங்கு'ன்னு கேக்கணும் சத்தம். அப்பறம் கடல்ல எறிஞ்சாலும் கரையாது பாத்துக்குங்க.

**266**

பெனாசிர் பேகம் - சுருளி.

தமிழ்நாட்டு முன்னணி இலக்கியப் பேச்சாளர்கள் பற்றி ...

மரபுகளின் எல்லைக்குள் நின்று பழைமைக்கும் புதுமைக்கும் பாலம்கட்டிச் சுவைகூட்டிச் சொல்லாடுவார் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.

தான் ரசித்த உயரத்திற்கு ரசிகர்களையும் குழைத்துக் குழைத்து அழைத்துச் செல்வார் குமரி அனந்தன்.

ஒரு மலை ஓடையாய்த் தொடங்கிக் காட்டாறாய் விரிந்து அருவியாய்க் கொட்டுவார் அவ்வை நடராசன்.

சத்தியக்கோடு பிறழாமல் தலைப்பு வட்டம் தாண்டாமல் உணர்ந்ததைப் பேசுவார் சத்தியசீலன்.

தமிழ்மொழியோடு உடல்மொழியும் கலந்து பேசுவார் சாலமன் பாப்பையா.

நயங்களைவிட நியாயங்கள் முக்கியம் என்று சமூக அக்கறையில் தமிழ்தோய்த்துப் பேசுவார் தமிழருவி மணியன்.

ஒரு வாழ்வியல் வழக்கறிஞராய் நியாயங்களுக்கு நயம் கூட்டிப் பேசுவார் சுகிசிவம்.

எங்கோ படித்த நகைச்சுவையைப் பொருளோடு பொருத்திப்புலமைகாட்டுவார் கு.ஞானசம்பந்தன்.

தர்க்கத்தையும் தமிழையும் பின்னி எடுத்துப் பேசுவார் பெரியார்தாசன்.

**ஆடி அருணா... படுகொலை பயங்கரம்!**

தமிழ் மக்களின் நாடித்துடிப்பு

# ஜூனியர் விகடன்

23-2 5.1.05 ரூ.6.00

வாரம் இருமுறை

## சுருட்டிய சுனாமி...



## சுதாரிக்காத அதிகாரிகள்...

கன்னியாகுமரி
மாவட்டத்தில்தான்
இந்த அவலக் காட்சி..

# பல்லிளிக்கும் உண்மைகள்!



# மரபை உடைத்த

கடந்த இதழுக்கு நியூஸ் கொடுக்க கடமை தவறாமல் வந்திருந்த, 'ஜே.கே.'வை (ஜூனியர் கழுகார்தான்) நாம் திருப்பி அனுப்பியிருந்தோம். "இப்ப நான் வரலாமா, சார்?" என்று நாம் புதுசாகக் கொடுத்த செல்போனில் கூப்பிட்டு அக்கறையோடு கேட்டவரை உடனே வந்து சேரச் சொன்னோம்.

"சுனாமியாம் சுனாமி! வைரமுத்து சொன்ன மாதிரி அது நிஜமாகவே பிரளயத்தின் பினாமிதாங்க!" என்று படபடத்தபடி வந்து உட்கார்ந்தார்.


"ஓ! நீயும் கடல் கொந்தளிப்பு சேதத்தைப் பார்வையிடத்தான் போயிருந்தியா? பதறாம ஒவ்வொரு விஷயமாகச் சொல்லுப்பா" என்று தட்டிக் கொடுத்தோம்.

"இந்த மாதிரி நேரத்துலகூட அரசியல் என்ன பாடுபடுத்துது, பாருங்க" என்று ஆரம்பித்த ஜூனியர் கழுகார்,

"மத்திய அமைச்சர்கள் தயாநிதி மாறனும் மணிசங்கர ஐயரும் **நாகப்பட்டினம்** ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாங்க. மாவட்ட எஸ்.பி-யான அப்துல் ரகூப் அவங்களிடம் ஓடிவந்தார். 'சார், சி.எம். வந்துகிட்டே இருக்காங்க. நீங்க கொஞ்சம் சீக்கிரமா பார்வையிட்டுக் கிளம்பினா நல்லது'னு பவ்யமா சொன்னாராம். 'அதெப்படி எங்களை நீங்க அவசரப்படுத்த முடியும்?'னு சொல்லிட்டு, நிருபர்களை அழைச்சு சில விஷயங்களை பேச ஆரம்பிச்சாங்க இரண்டு அமைச்சர்களும். அடுத்து, தஞ்சை மாவட்ட கலெக்டரான ராதாகிருஷ்ணனும் அவங்ககிட்டே ஓடி வந்தார். எஸ்.பி. மாதிரியே இவரும், 'சி.எம். வந்தாச்சு, சார். தயவுபண்ணி கிளம்புங்க'னு கெஞ்சாத குறையாகச் சொன்னாரு. தயாநிதி மாறனுக்கு வந்ததே பார்க்கணும், கோபம். 'அவங்க வந்தா நாங்க போயிடணுமா? பிரதமரோட சிறப்புத் தூதரா இங்கே வந்திருக்கோம், தெரியுமா?'னு தயாநிதி சீற, மாட்டிக்கிட்டு அடிபடற மத்தளம் மாதிரி ஆகிப் போச்சு அதிகாரிகள் கதி. அப்பவும் அனுப்பி வைக்கிற ஜரூரில், எஸ்.பி-யோட கை தயாநிதி மாறன் மேலே பட்டுவிட... எஸ்.பி-யை வறுத்தெடுத்துட்டார் அமைச்சர். எஸ்.பி. அங்கேயே நின்னு வாய்விட்டு அழாததுதான் குறை! நல்லகாலம்... மேற்கொண்டு பிரச்னையை வளர்க்காம ரெண்டு மத்திய அமைச்சர்களும் வேறு பகுதிக்குப் போய்ட்டாங்க."

"ஏம்பா! **கன்னியாகுமரி** பக்கம் சேதி என்ன? அலை முட்டினதுலே அய்யன் திருவள்ளுவருக்கு ஒண்ணும் சேதமில்லையே?" என்று கேட்டோம்.

"உலகப் பொதுமறை கொடுத்த தெய்வப் புலவரோட சிலை நிலைகலங்காம நல்லத்தாங்க இருக்கு. ஆனா, பக்கத்துல விவேகானந்தர் பாறையில் 'சுனாமி' டயத்துல




# மனிதாபிமானம்!

சிக்கிக்கிட்டவங்களைப் பத்தி புதுசா ஒரு தகவல் தெரிஞ்சுது" என்றார் ஜூனியர். கேட்குமுன் அவரே சொன்னார் -

"இந்தக் கூட்டத்தில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி மாத்தூரும் தன் குடும்பத்தோட சிக்கியிருந்தார் அப்படிங்கிறது உங்களுக்கே தெரியும். மீட்புக்கு யாரும் வராததால், அங்கிருந்த ஜனமெல்லாம் பதறிக் கதறுறதைப் பார்த்த நீதிபதி, அங்கிருந்தே சிலரைத் தொடர்புகொண்டு தமிழக முதல்வரின் தனிப் பிரிவு நெம்பரை வாங்கினாராம். தானே தொடர்பு கொண்டாராம். நோ ரெஸ்பான்ஸ்! கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் நீதிபதியே பலமுறை தொடர்பு கொண்டாராம். அதிலும் பிரயோஜனமில்லே. எப்படியோ, நீதிபதி சிக்கியிருக்கிற செய்தி கிடைச்சு, முதல்ல அவரையும் அவரோட குடும்பத்தையும் மட்டுமாவது காப்பாத்திடணும்னு சில அதிகாரிங்க முயற்சி பண்ணியிருக்காங்க. இது, விவேகானந்தர் பாறையில் சிக்கியிருந்த மத்த ஜனங்களுக்கு எப்படியோ புரிஞ்சுபோக... மொத்த கூட்டமும் ஏக்கப் பார்வையோட நீதிபதியையே சுத்தி வந்ததாம். ஒருவழியா மொத்தமா எல்லாரையும் காப்பாத்தி கரை சேர்த்த பிறகு, அதுல ஒருத்தர், 'நல்லவேளைப்பா! நீதிபதி மட்டும் நம்மோட இல்லாட்டி, நாளைக்குக்கூட காப்பாத்த ஆள் வந்திருக்காது'னு சொல்ல... கூட இருந்தவங்க அந்த கஷ்டத்திலும் அடக்கமுடியாம சிரிச்சாங்களாம்."

பாட்டிலிலிருந்த தண்ணீரை வாயில் கவிழ்த்துக்கொண்ட ஜூனியர், தொடர்ந்தார் -

"கஷ்டத்துல தங்களைக் கண்டுக்காத கோபத்துல **காஞ்சிபுரம்** மாவட்ட ஜனங்களும் ரொம்ப நொந்து போய்ட்டாங்க. இங்கே, செய்யூர் வட்டத்திலுள்ள சில கிராமங்களில் கடல் அலை பயங்கரமா கொந்தளிச்சு நாசம் பண்ணியிருக்கு. வீடு, படகுனு எல்லாம் போய், நிர்க்கதியா நின்ன மக்களுக்கு ரெண்டு நாளாகியும் ஆறுதல் சொல்ல அதிகாரிகள் வரலை. ஆத்திரமடைஞ்ச மக்கள், செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் இறங்கினாங்க. அதுக்கப்புறம்தான் மதுராந்தகம் ஆர்டிஓ-வான ஜெயந்தி அங்கே வந்தாங்களாம். ஜனங்களைக் கலைஞ்சுபோகச் சொன்னாங்களாம். 'போகாட்டி அரெஸ்ட்'னு வேற அவங்க சொல்ல... வெந்த புண்ணுல வேல் பாய்ச்சின மாதிரி ஆகிப் போச்சு ஜனங்களுக்கு. 'பரவாயில்லை... எங்களை ஜெயில்ல போடுங்க. அங்கவாவது ஒருவேளை சோறு கிடைக்கும்'னு கத்திட்டு, அழுதுகிட்டே அந்த ஜனங்க கலைஞ்சு போனாங்களாம்."

"பாவப்பட்ட ஜனங்களை நினைச்சா ரொம்பப் பரிதாபமா இருக்குப்பா!" என்று கண்கலங்கினோம்.

"இதே காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடப்பாக்கம் குப்பம் என்கிற பகுதியும் பாதிக்கப்பட்டிருக்கு. இது அச்சரப்பாக்கம் தொகுதிக்குள்ள வருது. இந்தத் தொகுதி ஆளுங்கட்சி எம்எல்ஏ-வான பூவராகமூர்த்தி, சேதம் பற்றி விசாரிக்க வந்தப்ப ஜனங்க அவரை வளைச்சுக்கிட்டாங்க. 'எலெக்ஷனுக்கு அப்புறம் நன்றி சொல்லக்கூட வரலை. இப்ப மட்டும் எங்க மேலே என்ன அக்கறை?'னு அவங்க வேதனையை வெளிப்படுத்த... வாக்குவாதம் முத்திப் போயிடுச்சாம். சமய சந்தர்ப்பம் புரியாம எம்.எல்.ஏ-வும் பதிலுக்கு சீறியிருக்காரு. 'உங்க ஊர்க்காரங்க வோட்டால மட்டும் நான் ஜெயிக்கலை. இனி உங்க வோட்டும் வேணாம், ஒண்ணும் வேணாம்'னு சொல்லிட்டுப் போனாராம். 'பொறுப்பான ஒரு எம்.எல்.ஏ. பேசுற பேச்சா இது!'னு ஜனங்க நொந்து போய்ட்டாங்களாம்."

மீட்புப்பணியில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்...



தயாநிதி மாறன் விசிட்...



அந்த சமயம் பார்த்து தூரத்தில் மணிச் சத்தம் கேட்க, ஜூனியரின் கண்கள் கலங்கிப் போயின.

"**வேளாங்கண்ணி** ஞாபகம் வந்துடுச்சுங்க. கொஞ்சம் சான்ஸ் கிடைச்சா கிடைச்சதைச் சுருட்டிக்கிட்டு ஓடற காலம் இது. கடல் கொந்தளிப்புல இறந்த சடலங்களிலிருந்து நகைகளையும் கேட்பாரற்றுக் கிடக்கிற உடைமைகளையும்

சுருட்டிக்கிட்டுப் போற சம்பவங்கள் நடந்திருக்கு. ஆனா, வேளாங்கண்ணி பகுதியில் மட்டும் இப்படி நடக்கலை. நகைகளையோ உடைமைகளையோ யாரும் தொடக்கூட இல்லை! ஏதோ ஒரு சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரிதான் இருந்தது இது!" என்றவர்,

"அதுவே, கடல் கொந்தளிப்புக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாத **மதுரை**யில் பாருங்க. சுனாமி நிவாரண நிதி வசூலிக்கிறோம்னு ஒரு பெண்கள் கோஷ்டி வீடு விடா வசூல் நடத்தியிருக்கு. ஏதோவொரு மகளிர் குழுவோட பேரைச் சொல்லி வந்த இவங்களிடம், வியாபாரிகளும், பொதுமக்களும் கேள்வி கேட்காம காசை அள்ளிக் கொடுத்திருக்காங்க. 'அந்தக் குழுவில் இருந்த சில பெண்கள், பண்டிகை காலங்களில் ஜவுளிக்கடையில் புகுந்து சேலை திருடின குற்றத்துக்காக அரெஸ்ட் ஆகியிருக்காங்கப்பா'னு யாரோ சொல்ல... லேட்டா முழிச்சுக்கிட்டு தேடிப் பார்த்தப்ப ஒரு பொம்பளையும் கையில் சிக்கலை.




காளிமுத்து

நகைக்கடை விழாவில்...

மதுரை போலீஸ் அதிகாரிகள் இப்ப இந்த கில்லாடி கும்பலை தேடு தேடுனு தேடிக்கிட்டிருக்காங்க."

"சேச்சே! எதை வச்சுத்தான் பிழைப்பு நடத்தறதுனு ஒரு விவஸ்தையே இல்லையா?" என்று நாம் சலித்து கொண்டோம்.

"இந்தக் களங்கத்தைத் துடைக்கிற மாதிரி அதே மதுரையில் நல்ல விஷயங்களும் நடந்திருக்குங்க. மதுரை அப்போலோ ஆஸ்பத்திரியிலிருந்து புறப்பட்ட டாக்டர்கள் டீம், குமரி மாவட்டம் மண்டைக்காட்டில் முகாமிட்டிருக்கு. மருந்து, மாத்திரை சகிதம் விறுவிறுனு மருத்துவ உதவி பண்ணிக்கிட்டிருக்காங்க இந்த டாக்டர்கள். இவங்களோட போயிருக்கிற நர்ஸ்களின் ஆறுதலான வார்த்தைகளைக் கேட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் மனசும் கொஞ்சம் தேறியிருக்குது" என்றார் ஜூனியர். அவரே,

"இதேமாதிரி, குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரும் 'உடுக்கை இழந்தவன் கை போல' உடனடியா உதவிக்கு வந்திருக்காரு. நாகை கலெக்டரை தொடர்பு கொண்டு, 'நான் இந்த நிவாரணப் பணிகளில் ஏதாவது செய்தாக வேண்டும். என்ன வேண்டுமோ, சொல்லுங்கள்'னு கேட்டாராம். 'பணம், பொருள் ஏதும் வேண்டாம். கௌரவம் பார்க்காமல் வேலை பார்க்கக்கூடிய சில நபர்களை மட்டும் அனுப்புங்கள். இங்கே சடலங்களை அகற்றும் பணி ரொம்பவே சுணங்கிப் போயிருக்கிறது'னு கலெக்டர் சொன்னாராம். அடுத்த ஒரு மணி நேரத்தில், எழுபத்தஞ்சு பேருடன் நாகப்பட்டினத்துக்கு அடிகளாரே நேரில் கிளம்பிட்டார். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னன்னா... பொதுவா, துறவிகள் இந்த மாதிரி துக்க நிகழ்ச்சிகளில் நேரடியா கலந்துக்கறதில்லை. தன் தாயார் இறந்தபோதுகூட அடிகளார் அந்த சடங்குகளில் பங்கேற்கலை. இப்ப, மனிதாபிமானத் துக்காக மரபை உடைச்சிருக்காரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்!"

நெகிழ்ந்துபோன நாம், "தம்பி! இதே குன்றக்குடியில இவருக்கு முன்ன ஆதினமா இருந்தவர் பற்றி ஒரு தகவல் உனக்குச் சொல்றோம், கேட்டுக்க. குமரி மாவட்டம் மண்டைக்காட்டில் மதக்கலவரம் வெடிச்ச சமயத்தில், அந்த மதக் கலவரத்தை அடக்குவதற்காக, அப்ப அடிகளா இருந்தவரும் மரபை உடைச்சிருக்காரு. குமரி மாவட்டத்துக்கு நேரில்போய், அங்கிருக்கும் மக்களோடு மக்களாகச் சேர்ந்து தானே மீன் விற்பனை செய்து, நிலைமையை சகஜ நிலைக்குக் கொண்டுவர உதவியிருக்காரு!" என்றோம்.

ஆர்வமாகக் கேட்டுக் கொண்ட ஜூனியர்,

"ஞாயிற்றுக்கிழமை 'சுனாமி' வளைச்சதில் தமிழ்நாடு முழுக்க திகிலிலும் சோகத்திலும் ஆழ்ந்தது. தமிழக அமைச்சர்களெல்லாம் ஏற்கெனவே தாங்கள் ஒப்புக்கிட்ட நிகழ்ச்சிகளை ரத்து பண்ணிட்டாங்க. ஆனா, சபாநாயகர் காளிமுத்து, **கோவை**யில் ஒரு நகைக்கடை விழாவில் கலந்துகிட்டு, கேக் வெட்டியிருக்கிறாரு. இந்த விழாவுக்கு கோவை மாநகர மேயர், கேரள நீதிபதி ஒருத்தர்னு வேறு சில வி.ஐ.பி-க்களையும் கூப்பிட்டிருந்தாங்க. ஆனா, அவங்கள்லாம் அந்த நிகழ்ச்சிக்குப் போகலை. சபாநாயகரும் போகாம தவிர்த்திருக்கலாமேனு அ.தி.மு.க-காரங்க கொஞ்சம் வருத்தமா பேசிக்கிட்டாங்க" என்று சொல்லிக் கொண்டே எழுந்த ஜூனியர்,

"சொல்ல மறந்துட்டேன், பாருங்க. இந்த நகைக்கடையை நம்ம வாசகர்களுக்கும் நல்லாத் தெரியும். கொஞ்ச காலத்துக்கு முந்தி, நடிகை ரம்பாவை டான்ஸ் ஆட கோவைக்கு வரவழைச்சிட்டு, அதுவே பெரிய கலாட்டாவா மாறிப்போச்சே... அதே நகைக் கடைதான்" என்று இடம் சுட்டி, பொருள் விளக்கிவிட்டுப் போனார்.

படங்கள்: இரா.இரவிவர்மன், ஆ.வின்சென்ட்பால், கு.மணிகண்டன்